**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 81/2024**

**வாதி தரப்பு சாட்சி–1 சண்முகம் திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 12.02.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) ஆறுமுகம் ஆசாரி எனது பாட்டனார். எனது பாட்டனாரின் தகப்பனார் பெயர் தெரியாது. ஆறுமுகம் ஆசாரி எப்போது இறந்தார் என்றால் பல வருடங்கள் ஆகிவிட்டது எனக்கு தெரியாது. தாவா சொத்து ஆறுமுகம் ஆசாரி விலைக்கு வாங்கியதா என்றால் இல்லை. ஆறுமுகம் ஆசாரிக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் அவருக்கு பாத்தியம் இல்லை. எனது தகப்பனாருக்கு தான் பாத்தியம். எதன் அடிப்படையில் தாவா சொத்து பூர்வீக சொத்து என சொல்கிறேன் என்று சொன்னால் நிலம் இல்லாதவர்களுக்கு அரசாங்கம் கொடுத்ததால் அது பூர்வீக சொத்தாகும். அரசாங்கம் யாருக்கு நிலம் கொடுத்தது என்றால் எனது தகப்பனார் மாணிக்கம் ஆசாரிக்கு கொடுத்தது. எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்றால் 1963 ம் வருடம் கொடுக்கப்பட்டது. தேதி, மாதம் தெரியாது.

2) அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட ஏதாவது உத்தரவு இருக்கிறதா என்றால் அ பதிவேடு மட்டும் தான் ஆதாரம். எதன் அடிப்படையில் எனது தகப்பனாருக்கு நிலம் கொடுத்தார்கள் என்றால் நிலம் இல்லாதவர் என்ற அடிப்படையில் பட்டா கொடுத்தார். வா.சா.ஆ.1 ஆவணத்தில் எந்த தேதி, வருடம், மாதம் வழங்கப்பட்டது என்பதற்கான குறிப்பு உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு முன்பு எனது தகப்பனார் பெயரில் பட்டாவோ, சிட்டாவோ உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு பைமாஷ் எண் என்ன என்றால் 1949 ஆகும். மேற்படி பைமாஷ் எண் எந்த வருடம் கொடுக்கப்பட்டது என்றால் 1954 ல் கொடுக்கப்பட்டது.

3) பைமாஷ் எண் எப்போது சர்வே எண்ணாக மாற்றப்பட்டது என்றால் 1962ம் வருடம் மாறியுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணம் எந்த வருடம் ஏற்படுத்தப்பட்டது என்றால் 1963ம் வருடம் ஏற்படுத்தப்பட்டது. அவ்வாறு அந்த ஆவணத்தில் கண்டுள்ளதா என்றால் இல்லை. அது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வழங்கப்பட்டது. வா.சா.ஆ.4 ஆவணத்தில் கண்டுள்ள கிராமத்தில் அனைத்து சர்வே எண்களும் வா.சா.ஆ.4ல் பதிவு உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு மட்டும் உள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு பின்னிட்டு தாவா சொத்து எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட வேறு ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4) வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு பின்னிட்டு எனது தகப்பனார் பெயரில் பட்டா கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. எனது தகப்பனார் எப்போது இறந்தார் என்றால் 05.03.2002ல் இறந்தார். எனது தகப்பனாருக்கு என்னுடன் சேர்த்து 3 பேர் வாரிசுகள். அதில் ஒரு பெண் சிறு வயதிலேயே இறந்துவிட்டார். எனது தகப்பனார் இறந்த பின்னிட்டு தாவா சொத்தில் எங்கள் குடும்பத்தில் யார் பெயரிலாவது பட்டா ஏற்பட்டதா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதியின் கணவர் பெயர் ராஜலிங்கம். 2 முதல் 4 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் அரசகவுண்டர். 6ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் ராஜலிங்க கவுண்டர். 7ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் நாகலிங்க கவுண்டர்.

5) 1 முதல் 4 பிரதிவாதிகளும், 5 முதல் 7 பிரதிவாதிகளும் உறவினர்களா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் ராஜலிங்க ஆசாரி பெயரில் பட்டா எண்.776ல் உள்ளது. மேற்படி பட்டா பொய்யாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. ராஜலிங்க ஆசாரியின் அப்பா பெயர் என்ன என்றால் எனக்கு தெரியாது. பட்டா எண்.776 தவறாக உள்ளது என்பதற்காக ஏதேனும் வருவாய்த்துறையில் நடவடிக்கை எடுத்தேனா என்றால் 2017ம் வருடம் வில்லங்க சான்று போட்டு பார்த்த போது தான் தெரிந்தது.

பின்னிட்டு நீதிமன்றத்திற்கு வந்து விட்டேன்.

6) நான் இவ்வழக்கை 2024ம் ஆண்டு தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். கடந்த 7 வருடமாக நடவடிக்கை எடுக்காததற்கு என்ன காரணம் என்றால் எங்கள் சொத்து எங்கள் வசம் இருந்ததால் நடவடிக்கை எடுக்கவில்லை. தாவா சொத்து எனது அனுபவத்தில் உள்ளது என்பதை காட்ட ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தகப்பனார் அனுபவம் செய்ததற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. யார் யாருக்கு கிரையம் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் 1 முதல் 4 பிரதிவாதிகள் 5ம் பிரதிவாதிக்கு ஒரு கிரைய ஆவணத்தை 47 சென்ட் நிலத்திற்கு எழுதிக்கொடுத்துள்ளனர். 1 முதல் 4 பிரதிவாதிகளின் குடும்பத்திற்கும் 2ம் பிரதிவாதிக்கு ஒரு விடுதலை ஆவணம் 47 சென்டிற்கு எழுதிக்கொடுத்துள்ளார்கள்.

7) 6,7 பிரதிவாதிகளுக்கும் இந்த வழக்கிற்கும் என்ன சம்பந்தம் என்றால் மேற்படி போலி ஆவணங்களுக்கு இருவரும் சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளார்கள். மாவட்ட பதிவாளரிடம் மேற்படி இரண்டு ஆவணங்களும் போலியானது என மனு கொடுத்தேனா என்றால் இல்லை. மாவட்ட நில அபகரிப்பு தடுப்பு பிரிவில் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன், அவர்கள் முறையாக நடவடிக்கை எடுக்கவில்லை. எந்த தேதி, மாதம், வருடம் புகார் கொடுத்தேன் என்றால் 2022ம் வருடம் கொடுத்தேன். அவர்கள் நீதிமன்றத்தை நாடும் படி கூறிவிட்டார்கள். அவ்வாறு நீதிமன்றத்தை அணுகுமாறு உத்தரவு ஏதாவது கொடுத்தார்களா என்றால் இல்லை.

8) நவலடி கருப்பண்ண ஆசாரி என்பவரை தெரியுமா என்றால் அவ்வாறு ஒரு நபர் இல்லை. ஆறுமுகம், இருளாண்டி என்கிற இருளன் ஆசாரி இருவரும் கருப்பண்ண ஆசாரியின் மகன்களா என்றால் அது பற்றி தெரியாது. இருளாண்டி எனது ஊரை சேர்ந்தவர். இருளாண்டியின் தகப்பனார் பெயர் என்ன என்றால் தெரியாது. ஆறுமுகம் ஆசாரியின் மனைவி அன்னகுஞ்சு

என்றால் அது பற்றி தெரியாது. அவர்களுக்கு நவலடி கருப்பண்ணன் என்ற மகன் உள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. நவலடி கருப்பண்ணனுக்கு இந்திராணி, லட்சுமி என்ற இரண்டு மனைவிகள் என்றால் அது பற்றி தெரியாது. இந்திராணியின் மகன் ஆறுமுகம், லட்சுமியின் மகன் நாகமுத்து என்றால் அது பற்றி தெரியாது.

9) 1 முதல் 5 பிரதிவாதிகளின் பதிலுரை விபரத்தை தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். வெள்ளப்பட்டி கிராம சர்வே எண்.228/2பி, 228/3 ஆகியவை ஆரம்பத்தில் நாகம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. 09.07.2012ல் 5ம் பிரதிவாதி நாகமுத்து நாகம்மாளிடம் இருந்து கிரையம் வாங்கியுள்ளாரா என்றால் அது பற்றி தெரியாது. சர்வே எண்.228/1, 228/2ஏ ஆகிய சொத்துக்களை 5ம் பிரதிவாதி 18.05.2018ல் நாகரத்தினம் வகையறாவிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி தெரியாது.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

**Principal District Munsif,**
**Kulithalai.**